# வாலிபன்
# VAALIPAN

வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை

## இதழ் - 49, மார்கழி 2011

VAALIPAN MINISTRIES

வாலிபன்
VAALIPAN
SINCE 2007

SRI LANKA

*Happy Christmas*
*&*
*Happy New Year*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிபன் வாசகர்களுக்கு,**

நான்கு வருட ஊழியப் பாதையைக் கடந்து ஐந்தாவது வருடத்திற்குள் நுழைவதற்கு அருமை இரட்சகர் செய்த எல்லாவித நன்மைகளுக்காகவும் நன்றிகளைத் தெரிவிக்கிறோம். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஒருவருக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உண்டாவதாக.

**கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். (II கொரி. 2:14)**

இந்த 4 வருட ஊழியங்களிலும், பல நெருக்கங்கள், எதிர்ப்புக்கள், பொருளாதாரப் பின்னடைவுகள், குறைவுகள், ஏன் ஊழியத்தையே விட்டுவிட என சிந்தித்த நேரங்கள் பல. **எனினும்,** ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஆண்டவருடைய கரம் வித்தியாசம் வித்தியாசமாய் செயற்பட்டதைக் காணக்கூடியதாய், உணரக்கூடியதாய் இருந்தது.

**"எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பது போல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது" (II கொரி.3:15)**

ஆகவே, இவ்வூழியத்தையும் ஊழியத்தின் அங்கத்தவர்களையும் 'அவர் தெரிந்துகொண்ட பாத்திரமாய்..' (அப் 9:15) கிறிஸ்துவுக்குள் விசுவாசித்து முன்னெடுத்துச் செல்கிறோம்.

கடந்த 4 வருடங்களாய் இவ்வூழியத்தை பலவிதங்களிலும் தாங்கிய உங்களுக்கு எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஆக்கங்களை எழுதிய, கடிதங்களை-வாழ்த்துக்களை எழுதிய, ஆலோசனைகளை வழங்கிய, பண உதவிகளை வழங்கிய எல்லாவற்றிற்கும் மேலாக மாதாமாதம் சஞ்சிகையை வாஞ்சையோடு வாசிக்கின்ற அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சஞ்சிகை ஊழியமாக 2007ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆரம்பித்த இவ்வூழியம் இன்று பலவிதங்களிலும் வளர்ந்து பின்வரும் பணிகளைச் செய்து வருகின்றது.

(a) SMS ஜெப ஊழியம்
(b) வேதாகம விடுமுறைப் பாடசாலை (VBS)
(c) வாலிபர் ஒன்றுகூடல்கள்
(d) வாலிபர் ஒருநாள் பாசறைகள்
(e) வைத்தியசாலை சந்திப்புக்கள்
(f) ஞாயிறு ஆராதனைகள்
(g) கிராமங்கள் தோறும் சுவிஷேசப் பிரதிகள் விநியோகித்தல்
(h) வன்னி மக்கள் மத்தியில் ஆடைகள் (சேகரித்தலும்) விநியோகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) வன்னி மாணவர்களுக்கு இலவச அப்பியாசக் கொப்பிகள் விநியோகம்
(j) வேதாகமப் படிப்புக்கள்
(k) வீட்டுக் கூட்டங்கள், முகாம்கள் சந்திப்புக்கள்
(l) 'கிறிஸ்துவுக்காய் பாடுவேன்' பாடல் போட்டிகள்
(m) வேதாகமக் கட்டுரைப் போட்டிகள்
(n) கிறிஸ்தவ தேவஸ்தலங்களில் சிரமதானங்கள்
(o) ஊழியர்களையும் ஊழியங்களையும் தாங்குகிற ஊழியங்கள்
(p) இலவச முழு வேதாகமங்கள் வழங்கல் (வன்னி)
(q) கிறிஸ்தவ ஊடகமாக (Media) செயற்படுதல்
(r) இலங்கையின் 25 மாவட்டங்களிலும் ஜெப ஊழியங்கள்/ஜெபக் குழுக்கள் உருவாக்குதல்.

**எதிர்கால வாஞ்சைகள் –:**


சகல சபைகளும், ஊழியங்களும் பயன்படுத்தக்கூடிய ஒலி, ஒளிபரப்புச் சாதனங்கள் கொண்ட நடமாடும் வாகனம்.

சபை ஆராதனைகள், வெளியரங்கக் கூட்டங்கள், கிராம ஊழியங்கள், மேடைகள், பாசறைகளில் பயன்படுத்தக்கூடிய நடமாடும் வாகனத்துடனான ஒலி, ஒளி அமைப்பு.

ஊழியங்களுக்கு உதவக்கூடிய வாகன வசதிகள்

முகாம்கள், பட்டறைகள் நடாத்தக்கூடிய Retreat Centre

தயவுசெய்து உங்களின் ஜெபங்களில் இவற்றிற்காக ஜெபிக்கவும்.

"விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை சொஸ்தமாக்கும்".

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**கிறிஸ்மஸ், புதுவருட நல் வாழ்த்துக்கள்!**

*கிறிஸ்துவின் பணியில்*
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாலிபனின் நான்காண்டு நிறைவையொட்டி வடக்கு கிழக்கு திருமாட்ட அவைத் தலைவரின்

# ஆசிச்செய்தி



**வ**ளமான ஆன்மீகத்தை நோக்கி வாலிபரை வழிநடத்தும் மாபெரும் திருப்பணியை நிறைவேற்றிக்கொண்டிருக்கும் **'வாலிபன்'** சஞ்சிகை தன் பணி வாழ்வில் நான்கு ஆண்டுகளை நிறைவு செய்வதையிட்டு மகிழ்ச்சிய டைவதோடு ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

ஒரு கிறிஸ்தவ வாலிபனின் வாழ்வு தான் சார்ந்த சமூகத்தில் பயன்தரும் மாற்றத்தை ஏற்படுத்துமேயாகில் அதனூடாக அழைப்பின் நோக்கம் நிறைவு பெறுகிறது. இது வரலாறு வெளிப்படுத்தும் மாபெரும் உண்மை. ஜோன் உவெஸ்லி, சாள்ஸ் உவெஸ்லி சகோதரர்களின் வாழ்வு இதற்கோர் சிறந்த எடுத்துக்காட்டு. இவ் வகையில் கோட்டைமுனை வாலிபர் சங்கத்தின் அர்ப்பணிப்பு மிக்க வாலிபர் சிலரைக்கொண்டு **வாலிபன்** சஞ்சிகை ஊடாக ஆண்டவர் வாலிபரி டையே மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறார். **அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழ் எங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளை யிடப்படவுமில்லை (அப் 4: 12)**

தெளிவான உறுதியான ஆணித்தரமான உண்மையை வெளிப்படுத்தும் இவ் வார்த்தைக்கு முரண்பாடான எப் போதனைகளையும் இனங்கண்டு கொள்ள சிறுவர் தொடங்கி பெரியவர் வரை ஒவ்வொருவரும் நாள்தோறும் இறை வார்த்தை எனும் ஆன்மீக உணவை உட்கொண்டே ஆக வேண்டும்.

நம் திருச்சபை உருவாக ஆண்டவரினால் வல்லமையாக பயன்படுத்தப் பட்ட மனிதரான அருள்திரு.ஜோன் உவெஸ்லியின் வாழ்வில் ஏற்பட்ட அனல டைந்த உள்ளத்தின் அனுபவம் வரலாற்றையே மாற்றியமைக்க காரணமாயிருந்தது இறை வார்த்தை என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

பலவிதமான மாறுபட்ட போதனைகளினால் திருச்சபையினர் இழுப்புண்டு போவதற்கு இந்நாட்களில் சந்தர்ப்பங்கள் அதிகம் உண்டு. வெறுமனே தம் இறையியல் அறிவை மாத்திரம் முன் வைத்து அறிவின் அடிப்படையில் பேசுபவர்களும் உண்டு. அதேவேளை இவ் அறிவோடு கூட ஆண்டவரோ டுள்ள நெருங்கிய உறவின் அனுபவத்தையும் இணைத்து பேசுகையில் அது இறை ஞானமாகிறது. இறை ஞானத்திலிருந்து வெளிப்படும் எந்தவொரு போதனையும் பயன்தராமல் போகாது. கேட்போர் உள்ளத்தையும் தொடுகிறது. கடந்து வந்த நான்கு ஆண்டுகளிலும் வார்த்தை மூலமும் அவ்வார்த்தை வெளிப்படுத்தும் வாழ்வான நலிவுற்றோரைத் தேற்றி அரவணைக்கும் திருப்ப ணியிலும் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்தி வரும் **'வாலிபனின்'** நற்பணி இன்னும் பல ஆண்டுகள் தொடர என் வாழ்த்துக்கள்.

**அருள்திரு.S.D. தயாசீலன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜோன் வெஸ்லி

**கனம் ஜோன் வெஸ்லி ஐயரின் வாழ்க்கைச் சரிதம் தொடர் நிகழ்வாய்....... 20**

சகோ.இராஜநாயகம் சுரேந்திரன்

இதன் பின்னர் 'பீட்டர் போலர்' எந்த வகையான ஆடம்பரமோ அல்லது ஆர்ப்பாட்டமோ இல்லாமல் அமைதியாக இங்கிலாந்தை விட்டுச் சென்றார். உண்மையில் இத்தொடரை வாசிக்கின்ற வாசகர்களே! ஒரு சிறிய காரியத்தை நம்மவர்கள் முடித்துவிட்டாலே அவர்களைப் பிடிக்க முடியாது. ஆனால் இந்த உலக சமுதாயத் திற்கு மிகச் சிறப்பான உன்னத பாத்திரத்தை இனிமேல் உலாவ விடப்பட தேவன் ஆயத்தம் செய்த இந்தப் 'பீட்டர் போலரின்' அற்புத உபதேசமே இங்கிலாந்தை உலுக்கும் உன்னதப் பிரசங்கி உருவாகக் காரணமாக அமைந்தது என்பதை இரகசியம் பலருக்கு அறவே தெரியாது.

வெஸ்லி ஐயர் மிகுந்த வேதனையையும், பாரத்தையும் அனுப வித்துக்கொண்டிருந்தார். அவரால் வாசிக்கவோ அல்லது பாடவோ, ஜெபிக்கவோ எந்தக் காரியத்தையும் செய்யவோ முடியாமலிருந்து. "என்னுடைய கிரியைகளும் என்னுடைய நல்ல காரியங்கள் யாவும் முடிவுக்கு வந்துகொண்டிருக்கிறதே" என அஞ்சினார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் சில நாட்கள் சிரமப்பட்டபோது, கிறிஸ்துவின் கிருபை யால் 'பீட்டர் போலரிடமிருந்து மீண்டும் ஒரு கடிதம் வந்தது. 2 பேதுவின் புத்தகம் **1:4**ம் வசனத்தின் மூலமாக கிறிஸ்து பேசினார். அருமையான சுபாவத்துக்கு பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையான வாக்குத்தத்தங்களும் அவைகளி னாலே நமக்கு அருளப்பட்டிருக்கிறது. அவர் இரட்சிப்புக்கு அருகிலிருக்கி றார் என்ற நிச்சயத்தை அவருக்குக் கொடுக்கும்படி "நீ தேவனு டைய இராச்சியத்திலிருந்து அதிக தூரத்தில் இல்லை" என்ற வசனத் தைத் தேவன் அவருக்குக் கொடுத்தார்.

பிற்பகலில் "ஆழங்களிலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன் கர்த்தாவே" என்று பாடப்பட்ட பாடல் அவருடைய இருதயத்தின் உருக்கமாக அமைந்தது.

அன்று மாலையில் 'அல்டஸ் கேற்' என்ற இடத்தில் நடைபெற்ற ஒரு சிறு கூட்டத்திற்குச சென்றிருந்தார். அங்கேயுள்ள போதகர் ரோமர் நிருபத்திலிருந்து பிரசங்கம் பண்ணி, பின் ஜெபிக்க ஆரம்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென ஆவியானவர் தமது பரிபூரணக் கிரியையை, வெஸ்லி ஐயரின் உள்ளத்தில் செய்ய ஆரம்பித்தார். கிருபையானது அவரது உள்ளத்திற்குள் பாய்ந்தோடியது. ஜீவனுள்ள விசுவாசம் அவரது நொறுங்குண்ட இருதயத்திற்குள் பிரவாகித்தது. பயம், அவிசுவாசம் ஆகிய கட்டுக்கள் முறிந்து விழுந்தன. மிகுந்த தூய்மையும், அனலுடைய தேவ அன்பும் அவருடைய இருதயத்திற்குள் பாய்ந்து, அவர் பரலோக உணர்வை அடையும்படி செய்தது. இரட்சிக்கப்படுவதற்குரிய ஒரே தேவை, கிறிஸ்துவின் பேரிலுள்ள விசுவாசமாகும். அப்படிப்பட்டதொரு விசுவாசமானது அவரிடத்தில் இப்பொழுது நிறைந்து காணப்பட்டது.

அவருடைய பாவங்கள் அவரைவிட்டு அகன்றன என்பதற்கும், அவர் பாவப் பிரமாணத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டு விட்டாரென்ற நிச்சயம், அவருடைய உள்ளத்திற்குள்ளே கொடுக்கப்பட்டது. தன்னை அசட்டை செய்து, துன்பப்படுத்திய அனைவருக்காகவும் அவர் தனது முழு இருதயத்தோடு ஜெபிக்க ஆரம்பித்தார். ஜோன் வெஸ்லி அவர்களுடைய சரித்திரம் தொடர்பான பல நூல்களை ஆய்வு செய்ய நேரிட்ட வேளையில், ஆச்சரியமான குறிப்புரையொன்று அடியானுக்குக் கிடைத்தது. அதாவது ஜோன் வெஸ்லி ஐயர் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை நிறைந்த மகிமையான வாழ்விற்குள் கடந்து வருவதற்கு முன்பாகவே, முன்குறிக்கப்பட்ட தேவனுடைய திட்டத்தின்படி சாள்ஸ்வெஸ்லி அவர்களை, கர்த்தர் தம்முடைய அளவிட முடியாத அபிஷேகத்தினாலும், ஆவியானவராலும் நிறைத்துவிட்டார். அவை பற்றிய சுவையான அம்சங்கள் அடுத்த இதழில் தொடரலாம்.

**(வெஸ்லி மீண்டும் வருவார்...)**

## நான்காம் ஆண்டின் நல்வாழ்த்துக்கள்....!

நானிலம் போற்றும்படி
நாதன் இயேசுவை பரப்பும் பணியில்

நான்காம் ஆண்டையும் படைத்து
நாடி வரும் **வாலிபனே!**

வாழ்த்துக்கூறிப் பாடிட - என்
வாயினில் வார்த்தைகள் போதவில்லை

வானமும் பூமியும் படைத்த - எம்
வல்லவராம் கிறிஸ்து உன்னை

நலமுடனும் வளமுடனும் வளர்த்திடுவார்
இன்னும் இன்னும்...

வன்னியின் வாசத்துடன்,
**திருமதி.கஜாளினி றிச்சட்**
வாலிபன் ஊழியங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டைமுனை சேகர முகாமைக் குருவிடமிருந்து......



**வா**லிபன் என்ற குழந்தை தனது நான்காவது பிறந்த பிறந்தநாளை நினைவு கூருவதையிட்டு கர்த்தராகிய ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தில் எனது பிறந்தநாள் வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

“வாலிபன்” என்ற குழந்தையை எனக்கு மூன்று வருடங்களாகத் தெரியும். அது தவழ்ந்து–நடந்து–ஓடி–கெம்பீரமாய் நிற்கும் காட்சி ஆண்டவர் எங்களை விசித்திர வினோதமாய் – ஒரு திட்டத்தோடு – ஒரு தரிசனத்தோடு படைத்திருக்கிறார் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் தரிசனத்தினை அடைய “வாலிப உருவாக்கம்” பிரதான பங்கை வகிக்கிறது. அந்தப் பங்கினை ‘வாலிபன்’ சஞ்சிகை இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் எல்லைகளுக்கு அப்பால் இலங்கையிலுள்ள சகல திருச்சபைகளோடும் எந்தவித சபை ரீதியான வேறுபாடுகளுமின்றி ஏன் உலகெங்குமுள்ள சபைகளோடும் கரங்களை இணைத்துள்ளதைக் கண்டு வியப்படைகிறேன் – வாழ்த்துகிறேன்.

“வாலிபன்” சஞ்சிகையின் நோக்கம், கிறிஸ்தவ வாலிபர்களை கிறிஸ்துவோடு எப்பொழுதும் இணைத்திருப்பதை உறுதிப்படுத்தும், அவர்களது சாட்சியின் வாழ்வை யதார்த்த வாழ்வியல் சூழ்நிலைகளில் வெளிப்படுத்துவதும், வாலிபர்களது எழுத்தாற்றலை கிறிஸ்துவின் பக்கமாய் திருப்பி, அவர்களது முழு வாழ்வையும் கிறிஸ்துவிற்காய் அர்ப்பணிப்பதாகும்.

எனவே, இப்பணியில் ஈடுபடும் வாலிபர் குழுவினரை வாழ்த்துகிறேன். சஞ்சிகைக்கு அப்பால் வார்த்தையின் ஊழியம், தொலைபேசி வழியிலான குறுஞ்செய்தி ஊழியம், வாலிப ஒன்றுகூடல்கள், ஞாயிறு பாடசாலை ஒன்றுகூடல்கள், விடுமுறை வேதாகமப் பள்ளி (VBS), வன்னி நிவாரணப் பணி என்ற அதன் தரிசனம் மேலும் வளர உதவி செய்த ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து, பிறக்கும் புதிய ஆண்டிலும் அவரது கிருபையால் தாங்கி வழிநடத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாராக! பாலகன் இயேசுக்கிறிஸ்து நாமத்தில் கிறிஸ்து பிறப்பின் வாழ்த்துக்களை வாலிபன் குடும்பத்தின் சார்பில் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**"உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும்,**
**பூமியிலே சமாதானமும்**
**மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக**
**என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்" – (லூக்கா 2:14)**

*கிறிஸ்துவின் பணியில்*
*என்றும் அன்புடன்*
அருட்திரு அ.சாமுவேல் சுபேந்திரன்

## 'ஓட்டத்தில் நான்காண்டுகள்'

'வாலிபன்' ஊழியத்தின் நான்காண்டுகள் நிறைவையொட்டி நடாத்தப்படும் 'நன்றி செலுத்தும் வழிபாட்டில்' கலந்து சிறப்பிக்க தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**மெதடிஸ்த ஆலயம் – கோட்டைமுனை.**
**மார்கழி 11ம் திகதி 2011 காலை 7.30 மணிக்கு.**

**"பின்பு யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன்" (ஏசாயா 6:8)**

**- வாலிபன் குடும்பத்தினரும் திருச்சபையும் -**

## கவிதைப்போட்டி - 33

கீழேயுள்ள வசனத்திற்குப் பொருத்தமான சமகால சிந்தனையோடு 4 வரிகளுக்குள் அடங்கக்கூடிய உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை தபாலட்டையில் எழுதி அனுப்புங்கள். சிறந்த கவிதைகள் எதிர்வரும் இதழில் பிரசுரிக்கப்படுவதுடன் பரிசில்களும் வழங்கப்படும்.

**"இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்;..."**
**(ஏசாயா 43:21)**

இறுதித் திகதி 31.12.2011

### கவிதைப் போட்டி - 32ல் வெற்றிபெற்ற சிறந்த கவிதை

**"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்" - (சங்.23:1)**



ஆடுகளாம் எம்மை பலியெடுக்க
அனேக ஓனாய்கள் இங்கு வந்தாலும்
ஆடிடுவோம் நாம் பயமின்றி
ஆண்டவர் இயேசு எம்
மேய்ப்பன் ஆனதால்!


Mr.Wilkins Joel
No.30/1A
Auburn Side
Dehiwala.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி - 48

உருவாக்கம் : J.சேரா



## இடமிருந்து வலம்

01) கிறிஸ்து மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரை அடைந்தவர்களில் இப்படியானார் என்கிறார் பவுல் (1 கொரிந்தியர் 13-15 அதிகாரங்கள்)

05) அந்திரேயாவின் சகோதரன் குழம்பியுள்ளான்.

08) கானானுக்குத் தகப்பன் திரும்பியுள்ளான்.

09) சாத்தானை இப்படியும் கூறுவர் (திரும்பியுள்ளது).

11) ஊபேரின் சந்ததிக்குத் தகப்பன் - (உதவி : ஆதியாகமம் 9-11 அதிகாரங்கள்)

13) நானும் இவர்களும் கர்த்தரையே சேவிப்போம் என்றான் யோசுவா.

14) முழங்கால் யாவும் முடங்கும், நாவு யாவும் என்னை முன்னிட்டு இது இடும் என்கிறார் கர்த்தர் (திரும்பியுள்ளது).

15) ஆபிராமின் சந்ததி கடற்கரையின் இதனைப் போல் இருக்கும் என்று தேவன் சொன்னார்.

## மேலிருந்து கீழ்

01) அப்போஸ்தலன் யோவான் சிறைவைக்கப்பட்ட தீவு (தலைகீழ்).

02) இயேசு இதனையும் கடலையும் அதட்டினார்.

03) எறும்பினிடம் ஞானத்தைக் கற்கவேண்டியவன் தலைகீழாயுள்ளான்.

04) மேதிய, பெர்சியா ராஜ்யங்களுக்குத் தானியேலின் புஸ்தகத்தில் ஒப்பிடப்பட்டுள்ள மிருகம் (தலைகீழ்).

06) பேதுரு, மல்குஸ் என்பவனின் இதை வெட்டினான் (தலைகீழ்).

07) உங்கள் உதடுகளால் கனம்பண்ணினாலும், இருதயமோ எனக்கு இப்படியிருக்கிறது என்கிறார் கர்த்தர்.

09) யாக்கோபும் யோசேப்பும் எகிப்திலே சந்தித்த இடம் (தலைகீழ்).

10) இது செய்கையில், வலதுகை செய்வதை இடதுகை அறியாதிருக்க வேண்டும் (குழம்பியுள்ளது).

12) இதிலே நடந்தால், வெளிச்சத்தைக் காண்கிறபடியால் இடறமாட்டோம்.

13) இதனோடும் சுரமண்டலத்தோடும் தேவனைத் துதியுங்கள் என்கிறார் தாவீது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 47 இற்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

03) பயம் (ம்பய)
05) மரம் (ம்மர)
07) நிர்ப்பந்தம் (பநிம்ர்தந்ப்)
08) வால்
09) பந்தி (ந்திப)
10) பலி (லிப)
11) அரண்
12) சபை
14) ஆம் (ம்ஆ)
15) வாடி
16) தமக்கை (மதகை)
17) கிருபாசனம்

**மேலிருந்து கீழ்**

01) நிருபம் (ருபநி)
02) கூடாரப்பண்டிகை (டாரப்பண்டிகை)
03) பலம் (ம்பல)
04) பாரம்பரியம் (யம்ரிபம்ரபா)
05) அந்தம் (ம்தந்அ)
06) மந்திரவாதம்
08) வாசல் (வால்ச)
13) கிருபை (பைருகி)
16) மனம் (மன)

**குறுக்கெழுத்துப் போட்டி 47க்கான சரியான விடை அனுப்பியவர்களில் பரிசுக்குரிய அதிஷ்டசாலி**

**B.அனுஜன்**
நாவற்குடா, மட்டக்களப்பு.

இப்போட்டியில் வெற்றி பெறுபவர் ஒரு வருடத்திற்கான எம் இதழைத் தொடர்ந்து இலவசமாகப் பெறுவார்.

**குறுக்கெழுத்துப்போட்டி 48ற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : 31.12.2011**

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**ஆசிரியர்,**
**குறுக்கெழுத்துப்போட்டி - 48**
**"வாலிபன்",**
**கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்**
**மட்டக்களப்பு.**



## சிறுவர்களுக்கான

## வினா விடைப் போட்டி இலக்கம் - 40

1) யோவான் ஸ்நானகனின் சீஷனாயிருந்து இயேசுவுக்கு பின் சென்றவன் யார்?

.......................................................................................................

2) "கேபா" என்பதன் அர்த்தம் என்ன?

.......................................................................................................

3) பிலிப்பு எந்த பட்டணத்தைச் சேர்ந்தவன்?

.......................................................................................................

4) "நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாக கூடுமோ?" என்று கேட்டது யார்?

.......................................................................................................

5) "கபடற்ற உத்தம இஸ்ரவேலன்" எனப்பட்டவன் யார்?

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினா விடைப் போட்டி

### 39 இற்கான விடைகள்

1) மோசே மூலமாய்
2) இயேசு கிறிஸ்துவால்
3) பெத்தாபரா
4) போதகரே
5) கிறிஸ்து

**சரியான விடை எதுவும் பெறப்படவில்லை.**

☞ இப்போட்டியில் வெற்றி பெறுபவர் அழகிய புத்தகம் ஒன்றினைப் பரிசாகப் பெறுவர்.

☞ வினா விடைப்போட்டி 40இற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : **31.12.2011**

அனுப்ப வேண்டிய முகவரி :
ஆசிரியர்,
வினாவிடைப் போட்டி - 40
'வாலிபன்' -
கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்,
மட்டக்களப்பு.

### போட்டி பற்றிய நிபந்தனைகள் :

- 16 வயதிற்குட்பட்டவர்களாய் இருக்க வேண்டும்.
- ஞாயிறு பாடசாலை அதிபர் / ஆசிரியரின் கையொப்பத்துடன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவை தெளிவாய் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

# வேதாகம அடிப்படையில் எமது ஜெபம்

- நாம் இடைவிடாமல் எமது ஜெபத்தை ஏறெடுக்க வேண்டும். **லூக்கா 18:1-8**
- நாம் உண்மையுடன் கூடிய ஜெபத்தை ஏறெடுக்க வேண்டும். **மத்தேயு 6:5-8**
- எமது ஜெபத்தில் தாழ்மை காணப்பட வேண்டும். **லூக்கா 18:9-14**
- நம்பிக்கையுடன் கூடிய ஜெபத்தை ஏறெடுக்க வேண்டும். **மாற்கு 11:22-25**
- இயேசுவின் நாமத்தினால் ஜெபிக்க வேண்டும். - **யோவான் 16:23-27**
- ஸ்தோத்திரத்துடன் கூடிய ஜெபமாக அமைய வேண்டும். **பிலிப்பியர் 4:4-7**



P.R.ஜீவந்தி
கோட்டைமுனை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவில் சேகரத்தில்

# 'வாலிபன்' ஊழியங்கள்




உலகத்தின் மீட்பரும், ஆண்டவருமாகிய இயேசுக்கிறிஸ்துவின் மகத்தான கிருபையினாலும், வழிநடத்துதலாலும் கடந்த மாதம் 19ம்











திகதி சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு திருக்கோவில் சேகரத்திற்குட்பட்ட சின்னமுகத்துவாரத் திருச்சபையில் அச்சபைக்குப் பொறுப்பாயிருக்கும் அருட்திரு.றொபட் சசிகரன் அவர்களின் ஒத்துழைப்போடு வாலிபர் ஒன்றுகூடலொன்று 'வாலிபன்' ஊழியங்கள் சார்பாக செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் சுமார் 50இற்கும் மேற்பட்ட வாலிபர்கள் உற்சாகமாகக் கலந்துகொண்டனர். இவ்வொன்றுகூடல் நிகழ்விற்கு கோமாரி முதல் அக்கரைப்பற்று பகுதிக்குட்பட்ட வாலிபர்கள் சபை பாகுபாடின்றி கலந்துகொண்டனர். இவ்வொன்றுகூடலில் துதிவேளை, பலவித உற்சாகமூட்டும் விளையாட்டுக்கள் மற்றும் தேவ செய்தி என்பன இடம் பெற்றது. அதனைத் தொடர்ந்து மறுநாள் காலை 20ம் திகதி ஞாயிறு ஆராதனையை திருக்கோவில் திருச்சபையில், அத் திருச்சபையின் முகாமைக்குரு அருட்திரு. ரவி முருகுப்பிள்ளை அவர்களின் ஒத்துழைப்போடு வாலிபன் குழுவினர் முழுப் பொறுப்பேற்று மிகவும் சிறப்பாக நடத்தினர்.

இந்நிகழ்வுகளில் கலந்துகொண்ட வாலிபர்கள் மற்றும் சபை மக்கள் கருத்துத் தெரிவிக்கையில் எதிர்காலத்திலும் இப்படிப்பட்ட நிகழ்வுகளை வாலிபன் ஊழியங்கள், குழுவாக வந்து நடத்துவதன் மூலம் இப்பிரதேசங்களில் ஆன்மீக நிலையை இன்னும் கட்டியெழுப்ப முடியுமெனத் தெரிவித்ததோடு, தங்களுக்கும் இந் நிகழ்வு ஆசீர்வாதமாக அமைந்ததாகத் தெரிவித்தனர்.

– சகோ.ஜேம்ஸ் சர்வானந்தன் –

வாலிபன் ஊழியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவியானவரின் பெயர்கள்

(01) பரிசுத்த ஆவி - லூக்கா 11:13, யோவா 20:22
(02) ஆவி - 1 கொரி.2:10
(03) நித்திய ஆவி - எபி 9:14
(04) நல்ல ஆவி - சங் 43:10, நெகே 9:20
(05) சத்திய ஆவி - யோவா 14:16, 15:26
(06) மகிமையின் ஆவி - 1 பேது 4:14
(07) தேவ ஆவி - 1 கொரி 3:16
(08) கர்த்தரின் ஆவி - ஏசா 11:2
(09) கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் - ஏசா 61:1
(10) பிதாவின் ஆவி - மத் 10:20
(11) கிறிஸ்துவின் ஆவி - ரோம 8:9, 1 பேதுரு 1:11
(12) சொந்த குமாரனின் ஆவி - கலா 4:6
(13) இயேசு கிறிஸ்துவின் ஆவி - பிலி 1:19
(14) சுட்டெரிப்பின் ஆவி - ஏசா 4:3
(15) நியாயத்தீர்ப்பின் ஆவி - ஏசா 4:3
(16) வாக்குத்தத்தத்தின் பரிசுத்த ஆவி - எபே 1:13
(17) சத்திய ஆவி - யோவா 14:16, 15:26, 16:13
(18) ஜீவனின் ஆவி - ரோமர் 8:12
(19) கிருபையின் ஆவி - சக 12:10, எபி 10:29
(20) தேற்றரவாளன் - யோவா 14:26, எபி 10:29
(21) ஞானத்தின் ஆவி - ஏசா 11:2, 1 கொரி 12:8
(22) விவேகத்தின் ஆவி - ஏசா 11:2
(23) உணர்வின் ஆவி - ஏசா 11:2
(24) ஆலோசனையின் ஆவி - ஏசா 11:2
(25) பலத்தின் ஆவி - ஏசா 11:2
(26) கர்த்தருக்குப் பயப்படும் பயத்தின் ஆவி - ஏசா 11:2
(27) தெளிந்த புத்தியின் ஆவி - 2 தீமொ 1:7
28) அன்பின் ஆவி - 2 தீமொ 1:7
(29) பெலத்தின் ஆவி - 2 தீமொ 1:7



*இணைவசன தேவதாகமத்திலிருந்து...*

*சகோ.சுதன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயேசுவின் பிறப்பில் இறைவனின் ஆயத்தும்....

எமது நாளாந்த வாழ்வில் ஏதாவது ஒரு பணியைச் செய்ய வேண்டுமாயின் ஆயத்தங்கள் மிக அவசியமாகத் தேவைப் படுகின்றது. இதன் ஒளியில் ஆண்டவர் இயேசுவின் பிறப்பை உற்றுநோக்கும்போது, அங்கே இறைவன் பல ஆயத்தங்களைப் புரிந்ததாக திருமறை கூறுகின்றது. கலாத்தியர் 4ம் அதிகாரம் 4ம் வசனத்தில் காலம் நிறைவேறியபோது தேவன் தனது மைந்தனை உலகிற்கு அனுப்பியதாக புனித பவுல் சின்னப்பர் கூறுகின்றார். அதாவது இங்கு காலம் நிறைவேறுதல் என்பது இயேசு பிறப்பதற்கான புவியியல், மத, அரசியல், பொருளாதார சூழ்நிலைகளை தேவன் ஆயத்தப்படுத்தியுள்ளார் என்பதே இதன் அர்த்தமாகும். உதாரணமாகப் பலஸ்தீனப் புவியியல், யூத சமய மேசியா எதிர்பார்ப்புக் கொள்கை கிரேக்க கலாசாரம் உரோம அரசியல், பொருளாதார நிலைகள் போன்றவைகள் அனைத்தையும் தேவன் ஆயத்தப்படுத்தியதே இதன் அர்த்தமாகும்.

கிறிஸ்துவின் பிறப்பு சம்பவத்தில் தேவன் இயேசுவை ஆயத்தப்படுத்தியமை புதுமைதரும் ஒன்றாகும். யோவான் நற்செய்தியின்படி (யோவான் 1:15) தேவனோடு இயேசு இருந்தார் எனக் கூறப்படுகின்றது. எனினும் பிலிப்பியர் 2:5-11 வரையுள்ள பகுதியில் தேவனுக்குச் சமமாக இருந்த இயேசு தன் நிலைகளை விட்டு இறங்கி மனித சாயலாகி அடிமை நிலையை எடுத்தார் என பவுல் கூறுகின்றார். மேலும், இயேசுவின் பிறப்பில் புலப்படும் சத்திரத்தில் இடமில்லாத அனுபவம், எகிப்திற்கு அகதியாகக் கொண்டு செல்லப்படும் அனுபவம் போன்ற கசப்பின் அனுபவங்கள் ஆகிய அனுபவங்களை அனுபவிக்கும் பாதையில் தேவன் இயேசுவை ஆயத்தப்படுத்தினார்.

இயேசுவின் பிறப்பில் அவரது பெற்றோரான மரியாள், யோசேப்பு ஆகியோரை ஆயத்தப்படுத்திய முறையும் புதுமையானதொன்றாகும். லூக்கா 1ம் அதிகாரம் 26 முதல் 38ம் வசனம் வரையுள்ள பகுதியில் மரியாள் மற்றவர்களின் மீட்பிற்காக ஆண்டவர் இயேசுவை உலகிற்கு ஈந்தருளும் பணியில் அவளுக்கு ஏற்பட இருக்கும் சவால்கள், பயங்கள், அவமானங்கள், இடர்பாடுகள் போன்றவற்றின் மத்தியில் இறைவன் அவளோடு இருப்பாள் என வாக்களித்த, அவளைத் தயார்படுத்தும் முறை அற்புதமானதொன்றாகும். மேலும், மத்தேயு 1:18-25 வரையுள்ள பகுதியில் மரியாளை ஏற்றுக்கொள்ள ஐயப்பட்ட யோசேப்புவைப் பலப்படுத்தி மீட்புப் பாதையில் பயணிக்கச் செய்த கடவுளின் ஆயத்தம் அளப்பெரியதொன்றாகும்.

இயேசுவின் பிறப்பில் இறைவன் தகுந்த முறையில் இயற்கையை ஆயத்தப்படுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியதை மறந்துவிடக்கூடாது. மத்தேயு 2:1-12 இல் ஞானிகளை வழிநடத்த விடிவெள்ளியை ஏற்படுத்தல், இயற்கையில் விண்தூதுவர்களின் அமைதிப்பாடல் போன்றவைகள், இயற்கை இயேசுவின் பிறப்பை அங்கீகரித்ததைக் காணலாம். மேலும் இயேசுவின் பிறப்பில் யூதர்கள் அல்லாத ஞானிகள் சென்று பார்க்கும் நிலை போன்றவைகளைக் குறிப்பிடலாம். மேலும் லூக்கா 2:29-32ம் வசனம் வரையுள்ள பகுதியில் சிமியோன் இயேசுவைக் கையில் ஏந்தி அவரைப் புகழ்பாடுவதைக் காணலாம். அதாவது இஸ்ராயலேருக்கு ஆறுதலையும் யூதரல்லாதவர்களுக்கு ஒளியையும் கொடுக்க வந்த கடவுளால் ஏற்படுத்தப்பட்ட இயேசுவைத் தன் கண்கள் கண்டன என கடவுளுக்கு நன்றிப் புகழ் பாடினார். இந்நிகழ்வு எவ்வாறு கடவுள் ஆலயத்தையும் அருட்பணியாளர்களையும் ஆண்டவர் இயேசுவின் பிறப்பைக் காண தயார்படுத்தினார் என்பதை லூக்கா காண்பிக்கின்றார். மேலும், அக்காலத்தில் நிலவிய ஆடம்பர வாழ்வுக்கு எதிராக எளிமை, தாழ்மை போன்ற எண்ணக் கருக்களையும் ஆணாதிக்கத்திற்கு எதிராகச் சமத்துவத் தொனியையும்



ஒடுக்குமுறைக்கு எதிராக விடுதலை ஒலியையும் துக்கத்திற்கு எதிராக மகிழ்ச்சியையும் கடவுள் ஏற்படுத்தியதை இயேசுவின் பிறப்பு நிகழ்வில் நாம் கண்டுகொள்ளலாம்.

இன்றைய போருக்குப் பின்னான எமது அரசியல், பொருளாதார, சமூக, மத, கலை கலாசாரச் சூழல்களின் மத்தியில் கிறிஸ்துவின் பிறப்பை நாம் நினைந்துகொள்ள அழைக்கப்படுகின்றோம். அன்று இறைவன் எவ்வாறு புறச் சூழல்களை இயேசுவின் பிறப்பிற்கு ஆயத்தம் செய்தாரோ அதே வகையில் இறைவன் எமது புறச்சூழல்களை அவருக்கு ஏற்ற விதத்தில் மாற்றியமைக்க இடமளிக்க அழைக்கப்படுகின்றோம். மேலும் யோசேப்பும் மரியாளும் கிறிஸ்துவின் பிறப்பிற்காகச் சிமியோனையும் ஆலயத்தையும் இயேசுவை வரவேற்க ஏற்றுக்கொள்ள எவ்வாறு ஆயத்தமாக்கினாரோ, அதே வகையில் ஆறுதலைக் கொடுக்கவல்ல ஆண்டவரைத் தரிசிக்கும் வகையில் எங்கள் அக ஆலயங்கள் ஆயத்தப்பட வேண்டும்.

அன்று இயேசுவின் பிறப்பிற்காக தேவன் எத்தகைய ஆயத்தங்களை மேற்கொண்டாரோ, அதே ஆயத்தங்களை இன்றும் அவர் செய்துகொண்டு இருக்கின்றார். எனவே, தனி மனிதர்களாக, குடும்பங்களாக, திருச்சபையாகத், தேசமாக இயேசுவின் பிறப்பிற்காக ஆண்டவர் எங்களைத் தமக்கு ஏற்ற விதத்தில் ஆயத்தப்படுத்த இடமளிப்போமாக!

**– அருட்பணி அருளம்பலம் ஸ்ரீபன் –**

**இலங்கை இறையியல் கல்லூரி.**

பிலிமத்தலாவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாவ சோதனையிலிருந்து விடுதலை

**தே**வனோடு ஏற்படுத்திக்கொண்ட உறவை விட்டுவிடாது தொடர்ந்தும் காத்துக் கொள்வது கிறிஸ்தவர்களாகிய எம் ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும். தேவன் தம்முடைய ஒரே பேறான புதல்வனை சிலுவையில் பலியாக ஒப்புக்கொடுத்ததன் மூலம் எம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார். இதனால் யாவருக்கும் இந்த உறவைப் பேணிக்கொள்ள வழி திறக்கப்பட்டிருக்கிறது. மனிதனோ அவ் உறவைப் பேணிக் காக்க வேண்டியவனாக இருக்கிறான். ஒவ்வொருவரும் தம் சிநேகிதரோடு கொண் டுள்ள உறவை விட்டுவிடாமல் அதை எவ்வாறு பேணிக் காக்கின்றார்களோ, அதே போல் ஆண்டவருடனும் தாம் கொண்ட உறவைப் பேணிக் காக்க வேண்டும். தேவ னோடு நாம் கொண்டுள்ள உறவை ஜெபத்தின் மூலம் பலப்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஆனாலும் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள் கூட பல வேளைகளிலும் பாவத்தில் வீழ்ந்து விடுதலை பெறாது தேவனோடு உள்ள நிலை யான உறவை முறித்துக்கொள்கிறார்கள்.

பிழை செய்த பின்பு அதை உணர்ந்து அறிக்கை செய்து, விட்டுவிட தயங்கும் போது நமக்கும் தேவனுக்கும் இடையேயுள்ள உறவில் விரிசல் ஏற்படுகி றது. இந்த சந்தர்ப்பத்தில் தேவ அன்பை உணர்ந்தவர்களாக செய்த தவறுகளை அறிக்கையிட்டு அதை விட்டுவிட வேண்டும்.

இவ்வா பாவ சோதனைகளிலிருந்து விடுபட்டு ஜெபத்தாடு ஜீவிக்க தேவன் தரும் வாக்குத்தத்தங்கள்....

- "கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்". (ரோம 10:9)
- "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனே இரக்கம் பெறுவான்". (நீதி.28:13)
- "நான் என் அக்கிரமத்தை மறைக்காமல் என் பாவத்தை உமக்கு அறிவித்தேன். என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன்" என்றேன். தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்" (சங்.32:5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✳ நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1 யோ 1:9)

✳ பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டு. (மத்.9:6)

எனவே கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரனே... இந்த அரும் பெரும் பாக்கியமாகிய உறவைப் பேணிக் காக்கவே கிறிஸ்து எம் ஒவ்வொருவரையும் அன்போடு அழைக்கிறார். இதை உணர்ந்தவர்களாக சாத்தானின் சூழ்ச்சியால் அந்த உறவு முறிபட நேரும்போது பாவ அறிக்கையின் மூலம் திரும்பவும் இணைந்து அந்த பாவத்தை அறிக்கைசெய்து விட்டுவிட இருதயத்தில் தீர்மானித்துக் கொள்வோமாக!

S.சுதாஜினி
களுவன்கேணி.

# ஓய்வுநாளைப்
## பரிசுத்தமாய் ஆசரிப்பாயாக....!

அடித்து வெளுத்த ஆடைகள் சர சரக்க...
கைபடாத காலணிகள் பளபளக்க...
அழகுசாதன பொருட்கள் வரிசையாய் அணிவகுக்க – நறுமணம்
வீசும் அதி மதுர தைலம் தலைமைதாங்க...

விரலோடு உறவாடி மடிந்த புகையிலையை நசுக்கி...
நிர்வாண நடன ஒளிபரப்பை நிறுத்தி....
அறை நோக்கி செல்கிறான் எம் நாயகன் – புத்தாடை
தரித்து அன்று ஆலயத்தை அலங்கரிக்க...

A.Eric
Moor Road Church


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை பாஸ்டர் ஐக்கியத்துடன் இணைந்து

# கல்முனையில் VBS



கடந்த நவம்பர் மாதம் 19ந் திகதி கல்முனைப் பிரதேச சிறுவர், சிறுமியர்களுக்கான விடுமுறை வேதாகம பாடசாலை, ஆண்டவரும் இரட்சகருமான இயேசுக்கிறிஸ்துவின் கிருபையினால் 'வெளிச்சம்' என்ற தலைப்பின் வாலிபன் ஊழியங்களால் நடாத்தப்பட்டது. அம்பாறை மாவட்டத்திற்கான நூறு நாள் ஊழியத்திட்டத்தின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்ட ஐந்து நிகழ்வுகளுள் ஒன்றான இந்நிகழ்விற்கு சிறுவர் சிறுமியர்கள் ஆவர்வத்துடன் வந்து கலந்து கொண்டார்கள்.

காரைதீவு தொடங்கி, நீலாவணை வரையிலான பிரதேசங்களைச் சேர்ந்த அனைத்து சபைகளிலும் இருந்து வந்த சுமார் 113 சிறுவர், சிறுமியரை உள்ளடக்கியதாய் இவ் வேதாகமப் பாடசாலை நிகழ்வுகள் இடம்பெற்றது.

காலை 9.00 மணிக்கு பாடல் வேளையுடன் ஆரம்பிக்கப்பட்ட இந் நிகழ்வில் பிள்ளைகள் மிகவும் குதூகலமாய் ஆடிப்பாடி பங்கேற்றார்கள். அதனைத் தொடர்ந்து வயதின் அடிப்படையில் சிறுவர்கள் பிரிக்கப்பட்டு, அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த வகுப்பறைகளுக்கு ஆசிரியர்களால் அழைத்துச் செல்லப்பட்டார்கள். வகுப்பறைகளில் ஆசிரியர்களால் மெய்யான ஒளி, மெய்யான ஒளியைப் பின்பற்று தல், உலகின் ஒளியாக வாழ்தல் போன்ற தலைப்புகளில் நடாத்தப்பட்டது. கைவேலைகள், அழகிய ஆக்கங்கள் என்பவற்றுடன் இணைக்கப்பட்டதாய் கற்பிக்கப்பட்ட பாடங்கள் சிறுவர்கள் ஆர்வத்துடன் அவதானித்தைக் காணக் கூடியதாயிருந்தது.

மதிய உணவின் பின்னர் 23ம் சங்கீதம் சிறுவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டு, அதனை அவர்களே இறுதி நிகழ்வுகளாய் ஒழுங்குபடுத்திச் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டார்கள். இதன் மூலம் ஒவ்வொரு பிள்ளையினதும் தாலந்துகளை அடையாளம் காணக்கூடியதாய் இருந்தது. இறுதியாகக் கலந்து கொண்ட மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கியதுடன் இந்நிகழ்வுகள் நிறைவு பெற்றது.

இந்நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற உதவிய அம்பாறை பாஸ்டர்ஸ் ஐக்கியத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் விசேஷமாக இந்நிகழ்வுகளை நடாத்துவதற்காக தனது ஆலயத்தைத் திறந்து கொடுத்த கல்முனை சீயோன் தேவாலய போதகர் அவர்களுக்கும் எமது வாலிபன் குடும்பத்தினர் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"ஒருவராய் பெரிய அதிசயங்களை செய்கிறவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது" - (சங்.136:4)

**சகோ.சுரேன்**
**வாலிபன் ஊழியங்கள்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறை நீலாவணைத் திருச்சபையில் வாலிபன்

இயற்கை அழகு நிறைந்த துறை நீலாவணைத் திருச்சபையில், கடந்த நவம்பர் மாதம் 20ந் திகதி





'வாலிபன்' குழுவின்ராய் ஒரு மாலை நேர வழிபாட்டை நடத்த கால்பதித்தோம்.

எமது வாலிபனின் நூறுநாள் ஊழியத் திட்டத்தில் ஒழுங்கமைக்கப் பட்ட இந்நிகழ்வில் துறை நீலாவணைத் திருச்சபையைச் சேர்ந்த சபை மக்கள் வந்து உற்சாகமாய் எங்களுடன் இணைந்து ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவை ஆராதித்தது வாலிபர்களாகிய எங்களுக்கு புதிய உற்சாகத்தைத் தந்தனர்.

கலந்துகொண்ட ஒவ்வொரு சபை மக்களுக்கும் தாங்கள் ஆண்டவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டதாகக் கூறி வாலிபன் குழுவினராகிய எங்களை வாழ்த்திச் சென்றார்கள்.

இந்த வழிபாட்டை சிறப்பாக நடத்த அனைத்து உதவிகளையும், ஒத்தாசைகளையும் வழங்கிய துறை நீலாவணை மெதடிஸ்த திருச்சபையின் ஊழியர் சகோதரி நித்தியகலா அவர்களுக்கு எமது நன்றிகள். எல்லாவற்றிற்கும் மேலாக எங்கள் மூலமாய் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தை மகிமைப்படுத்திய பிதாவாகிய தேவனை நான் ஸ்தோத்தரிக்கிறேன்.

**வஜித்தா**

**வாலிபன் ஊழியங்கள்**

**கடந்த 4 ஆண்டுகளும் 'வாலிபன்' ஊழியத்தைப் பலவிதங்களிலும் தாங்கிய வாசகர்களுக்கு கிறிஸ்மஸ், புதுவருட நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உங்கள் ஜெபத் தேவைகளை எங்களுக்குத் தபால் மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, **SMS** மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

**SMS க்கான இலக்கங்கள் :**

**077-7813269, 077-2335106,**
**0779-584930, 077-7718847**

வாலிபர்களுக்கான விஷேட ஜெபம் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் காலை 7.00 மணிக்கு **கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயத்தில்** இடம்பெறும்.

இப்புத்தகத்தை தங்களது சபைகளிலும், அறிமுகம் செய்ய விரும்புபவர்கள் தயவாய் எம்மைத் தொடர்பு கொள்ளவும். இதன் மூலமாய் வரும் ஆசீர்வாதங்கள் தங்களது வாழ்வையும், சபைகளையும் நிரப்புவதாக!

## மெதடிஸ்த வாலிபர் ஒன்றியம் - கோட்டைமுனை.


கடிதத் தொடர்புகளுக்கு :

**ஆசிரியர்,**

**"வாலிபன்" சஞ்சிகை,**

மெதடிஸ்த ஆலயம், கோட்டைமுனை, மட்டக்களப்பு, இலங்கை.

மின்னஞ்சல் :vaalipan_kyf@yahoo.com


சண் அச்சகம் - மட்டக்களப்பு. 065-2222597



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org